அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 32/90

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு. 7
1990, ஜூலை 30ஆம் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
ஆளுநரின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும், அரசாங்க அதிபர்கள் மற்றும்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும்.

பயங்கரவாதம் மற்றும் அரசவிரோத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள்.

பயங்கரவாத /அரசவிரோத நடவடிக்கைகளின் மூலம் பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபனப் பணியாளர்கள், உள்ளூராட்சிச் சபைப் பணியாளர்கள் ஆகியோர் முன்னைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை நியதிகளின்படி அவர்களுக்குரித்தான நிவாரணங்களுடன் சேர்த்து அவர்களின் மாதாந்த வருமானம் எதுவாயிருப்பினும் மேலதிகமாகப் பின்வரும் நிவாரணங்களைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(1) இறப்பு நிகழ்ந்திருப்பின் ஈமக்கிரியைச் செலவுகளுக்கென ரூபா. 2000.00 (இரண்டாயிரம்)

(11) தற்காலிகமாக நண்பர்களுடனும்/சொந்தக்காரர்களுடனும் அல்லது நலனோம்பு நிலையங்களில் வசிக்கும் இடம் பெயர்ந்த உத்தியோகத்தர்கள் அணித்தாயுள்ள கூட்டுறவுப் பண்டசாலையிலிருந்து தாம் இடம் பெயர்ந்த திகதியிலிருந்து பங்கீட்டுப் பண்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராகும். அவர்கள் தமது சொந்த வதிவிடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்பும் 6 மாதங்களுக்கு இது தொடர்ந்து வழங்கப்படும். ஒருகுடும்பத்தில் உள்ள ஆட்களின் எண்ணிக்கைக்கேற்ப வாரமொன்றுக்கு அவர்கள் பெறும் பங்கீட்டுப் பொருட்கள் பெறுமானம் கீழே தரப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| குடும்பத்திலுள்ள ஆட்களின் எண்ணிக்கை | உரித்துடைய பங்கீட்டுப் பொருட்களின் பெறுமானம் - ரூபா. |
|---|---|
| 1 | 55 |
| 2 | 85 |
| 3 | 105 |
| 4 | 125 |
| 5 | 155 |
| 6 | 170 |
| 7 | 185 |
| 8 உம் அதற்கு மேலும் | 200 |

02. இச்சுற்றறிக்கை புனரமைப்பு மறுசீரமைப்பு சமூகநல அமைச்சின் ஒருப்பாட்டுடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை செயல்முறைப்படுத்துவதற்கான வேண்டிய நடவடிக்கைகள் யாவும் அந்த அமைச்சினால் செய்யப்படும்.

ஒப்பம்: கலாநிதி பி. ஏ. ரி. குணசிங்க.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.